திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இந்த சேத்தூர் பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. அங்கு 66 கே. வி. உப மின் நிலையம் ஆரம்பித்தால் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களும், பொது மக்களும் மிகவும் மகிழ்ச்சி அறை வார்கள். ஆகவே, அதை ஆரம்பிக்க நில ஆர்ஜிதம் செய்ததற் காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்குப் தமிழக முதல்வரவர்களுக் கும் அப்பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரப் பகுதிகளுக்கு போரூர் ஏரியிலிருந்து குடி நீர் வழங்கல்.

*வினா எண் 584—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரைச் சேர்ந்த அசோக் நகர், கலைஞர் கருணாநிதி நகர், எம். ஜி. ஆர். நகர் ஆகிய பகுதிகளுக்கு குடி தண்ணீர் விநியோகத்திற்கு போரூர் ஏரியிலிருந்து குழாய்கள் அமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஆ) இந்த குடி தண்ணீர் சப்ளை மூன்று நகர்களுக்கும் போது மானவையா அல்லது பற்றாக்குறையா?

(இ) இதனை விரிவுபடுத்த திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ரூபாய் 8.95 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் வகுக்கப்பட்டது. அசோக் நகர், எம். ஜி. ஆர். நகர் ஆகிய பகுதிகள் இதனால் பயனடையவில்லை.

(ஆ) போரூர் ஏரியில் உள்ள கிணறுகளிலிருந்து வழங்கப்படும் தண்ணீர் மட்டும் இப்பகுதிகளுக்கு போதுமானதல்ல.

(இ) இப்பகுதிகள் இப்போது முழுமையாக சென்னை மாநக ராட்சி எல்லைக்குள் சேர்க்கப்பட்டுள்ளதால, தேவையான குடி நீர் வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இன்றைக்கு அந்தப் பகுதியிலுள்ள கருணாநிதி நகர் இருக்கும் பகுதி, எம். ஜி. ஆர். நகர் இருக்கும் பகுதி ஆகியவற்றில் தண்ணீர்க் கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அப்படியிருந்தும் இவ்வளவு ரூபாய் செலவில் போடப்பட்ட அந்தத் திட்டம் *பெயிலியர் ஆகி விட்டதா அல்லது நல்லமுறையில் செயல்படுகிறதா என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். அந்தப் பகுதியில் விரைவாகத்

1979 மார்ச் 31]

தண்ணீர் அளிக்கும் திட்டத்தை எந்த வகையில் மேற்கொள்ள இருக்கிறது? இல்லையென்றால், பாலாற்றில் இருந்தாவது அல்லது வேறு எங்கேயாவது இருந்தோ தண்ணீரை அரசு கொண்டு வருவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, முதல் திட்டத்தில் கருணாநிதி நகர் தவிர அசோக் நகர், எம். ஜி. ஆர். நகர் ஆகிய பகுதிகள் பலன் பெறவில்லை. இப்பொழுது 12 பஞ்சாயத்துக்கள் சென்னையோடு இணைந்திருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் சேர்த்துக் குடிநீர் தருவதற்கான திட்டம் ஆய்விலே இருக்கிறது.

திரு. பொ. சிவாமணி : பேரவைத் தலைவரவர்களே, இது போன்றே திருவொற்றியூர் பகுதியில் உள்ள எருக்கஞ்சேரி போன்ற பகுதிகள் சென்னையோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு டேங்க் மூலம் தண்ணீர் வசதி தர ஸ்பெஷல் ஆபீசர் ஆணையிட்டும் அது இதுவரையில் செயல்பட்டு இயங்கவில்லை என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா? அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.40]

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இன்றைக்கு தாங்கள் போரூர் ஏரிப் பக்கம் போகும்போதும் வரும்போதும் பார்த்திருப்பீர்கள். கிணறுகள் உபயோகப்படுத்தப்படாமலிருக்கின்றன. மோட்டார்கள் எல்லாம் இருக்கின்றனவா ? அங்கில்லாவிட்டால், வேறு எங்காவது அந்த மோட்டார்களைப் பயன் படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அங்கிருந்து கொண்டு வந்துதான் இப்பொழுது கலைஞர் கருணாநிதி நகருக்குக் கொடுக்கப்படுகிறது. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த எந்தக் கேணிகள் பாழடைந்து விட்டன, தண்ணீர் வரவில்லையென்று சொன்னால், Madras Metropolitan Water Supply and Sewerage Board Authority அவர்களை அனுப்பி தக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்கிறேன்.